**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 7/2025**
**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. முருகன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ராஜ்** | **Calling** | : | **கொத்தனார்** |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **45** |
| | | | **Dated** | : | **23.10.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 11), **திரு. முருகன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை :–**</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி அசோக்குமார் என்பவரைத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக நான் மேட்டுப்பட்டி டீக்கடையில் டீ குடித்துக் கொண்டு இருந்தபோது, போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக மேற்படி கையெழுத்தை செய்தேன் என்று எனக்குத் தெரியாது. என் முன்பாக எந்த கத்தியையும் போலீசார் கைப்பற்றவில்லை. **மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில்**

**உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ. 2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

கடந்த 12.04.2018ம் தேதி 14.30 மணிக்கு நானும், விஜயகுமார் என்பவரும் தோமையார்புரம் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் இந்த வழக்கின் எதிரிகள் அசோக்குமார், சந்திரசேகர், சீனிவாசன் மற்றும் ராஜீவ்காந்தி ஆகியோரை கைது செய்ததாகவும், அவர்கள் தன்னிச்சையாக போலீசாரிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதன் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட அத்தாட்சியில் கையொப்பம் செய்ததாகவும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 23.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.